பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**28 06 2026** **SUNDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ் விமானங்களும், போர் கப்பல்களும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு சாதனை படைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. போலியோ சொட்டு மருந்து முகாம் நாடு முழுவதும் இன்று நடைபெற்று வருகிறது.

4. ஆஸ்திரேலியாவில் 16 வயதுக்கு உட்பட்டோருக்கான சமூக ஊடக தடை மேலும் கடுமையாக்கப்படும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

5. அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள்...

<<<<<<>>>>>

**சுயசார்பு இந்தியா** திட்டத்தின்கீழ் விமானங்களும், போர் கப்பல்களும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு சாதனை படைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், **C-295** ரக விமானங்கள் இந்தியாவிலேயே தயாரித்து நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக கூறினார்.

***(Sound Byte — மோடி (1) — 63 Sec.)***

**சர்வதேச யோகா** தினத்தையொட்டி கடந்த **21**-ஆம் தேதி உலகமெங்கும் **2** ஆயிரத்து **500**-க்கும் மேற்பட்ட இடங்களில் யோகாசன நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக அவர் தெரிவித்தார்.

***(Sound Byte — மோடி (2) — 34 Sec.)***

மேற்காசியாவில் நிலவும் பிரச்சினையைத் தொடர்ந்து மக்கள் சில காலம் வரை தங்கம் வாங்குவதை தவிர்க்க வேண்டும் என்று தாம் கேட்டுக்கொண்டதாக பிரதமர் தெரிவித்தார்.

***(Sound Byte — மோடி (3) — 30 Sec.)***

பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாட்டை குறைக்கும் வகையில், மக்கள் அதிகஅளவில் பேருந்து மற்றும் மெட்ரோவை பயன்படுத்த தொடங்கியிருப்பதாக அவர் கூறினார்.

பிரதமரின் விபத்து காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், இதுவரை 58 கோடிக்கும் மேற்பட்டோர் இணைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

*(Sound Byte — மோடி (4) — 38 Sec.)*

நமது கிராமங்கள் மற்றும் நகரங்களை தூய்மையாக பேணி காப்பதன் அவசியம் குறித்து பிரதமர் எடுத்துரைத்தார்.

*(Sound Byte — மோடி (5) — 54 Sec.)*

விநாயகர் சதுர்த்தியின்போது மண்ணால் ஆன விநாயகர் சிலைகளை வாங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

*Sound Byte — மோடி (6) — 54 Sec.)*

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

<<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் கனவை நிறைவேற்றும் வகையில், பல்வேறு அடிப்படை கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 12 ஆண்டுகளில் ரயில்வே, நெடுஞ்சாலைகள், விமான நிலைய விரிவாக்கம் என அடிப்படை கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

***(Sound Byte — எல். முருகன் — 40 Sec.)***

<<<<<<>>>>>

போலியோ சொட்டு மருந்து முகாம் நாடு முழுவதும் இன்று நடைபெற்று வருகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கிய இந்த முகாம், மாலை ஐந்து மணிவரை நடைபெறும்.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், ரயில் மற்றும் பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இந்த முகாம் தற்போது நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் **43** ஆயிரத்திற்கும் மேற்பட்ட மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை பாலவாக்கத்தில் முதலமைச்சர் திரு விஜய் குழந்தைகளுக்கு சொட்டுமருந்து வழங்கி, இம்முகாமினை தொடங்கி வைத்தார்.

<<<<<<>>>>>>

ஆஸ்திரேலியாவில் **16** வயதுக்கு உட்பட்டோருக்கான சமூக ஊடக தடை மேலும் கடுமையாக்கப்படும் என்று அந்நாட்டு பிரதமர் திரு **Anthony Albanese** தெரிவித்துள்ளார்.

இந்த தடையை மீறும் சமூக ஊடக நிறுவனங்கள் மீதான அபராதம் இரட்டிப்பாக்கப்படும் என்று ஆஸ்திரேலிய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, புதிய சட்டம் கொண்டுவரப்படும் என்று கூறிய அந்நாட்டு அரசு, தற்போதைய அபராதமான **34** புள்ளி ஒன்று மில்லியன் டாலரிலிருந்து **68** புள்ளி மூன்று மில்லியன் டாலராக அதிகரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் **New Castle**-ல் பல்கலைக்கழகம் மேற்கொண்ட நடத்திய ஆராய்ச்சியில் **16** வயதுக்கு உட்பட்ட **85** சதவீத குழந்தைகள் தடையை மீறி சமூக வலைதளங்களை பயன்படுத்துவதாக கண்டறிந்தது.

இதனையடுத்து, இந்த வாரம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற கூட்டத்தில் புதிய சட்டம் கொண்டுவர ஆஸ்திரேலிய அரசு திட்டமிட்டுள்ளது.

<<<<<<>>>>>

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஶ்ரீகாந்த் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

கலிபோர்னியாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **22-20, 15-21, 21-19** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Yudai Okimoto**-வை வென்றார்.

நாளை நடைபெறும் இறுதியாட்டத்தில் ஶ்ரீகாந்த் - சீன தைபே-யின் **Su Li Yang** -ஐ எதிர்கொள்கிறார்.

------------------

இந்தியா — அயர்லாந்து இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Belfast**-யில் இப்போட்டி மாலை ஆறு மணிக்கு தொடங்குகிறது.

-----------------

உலகக் கோப்பை மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

லண்டன் **Lords**-ல் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>**